Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 213 / 2022

**DEPOSITION OF COMPLAINANT SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name : | பாபு | Calling: | தனியார்நிறுவனம் |
| Father's Name: | கருணாகரன் | Religion: | இந்து |
| Village: | சின்னவேப்பம்பட்டு | Age: | 31 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 17.07.2023

SIGN :

(எதிரி ஆஜர். .)

ம.சா.1 குறுக்கு விசாரணை.

நான் பி.இ. மெக்கானிக் இன்ஜினியரிங் படித்துள்ளேன். சரண்யா என்னுடைய பெரியம்மா மகள் ஆவார். அவரை நான் விசாரிக்கும்போது நீதிமன்றத்தின் கதவு ஓரமாக நின்று கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். ராஜீவ்காந்தி என்பவர் என்னுடைய மாமா என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் ராஜீவ்காந்தி எனது நண்பர் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுப்பதற்காக பாபு தான் கேட்டதும், பரிந்துரை செய்ததும் அவர்தான் என்றால் சரிதான். பாபு என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டார் நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை, பிப்ரவரி மாதம் 2022ல் கொடுத்தேன். மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் பணம் கொடுத்த தேதியில் என் வீட்டிற்கு பாபும், எதிரியும் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் பணத்தை பாபுவிடம் கொடுத்து தான் எதிரியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பாபு இருந்தார் ஆனால் எதிரியிடம் பணத்தை நான் தான் கொடுத்தேன். நான் பணம் கொடுத்து ஒரு மாதம் காலம் கழித்து எனக்கு பாபுவும் எதிரியும் ஒன்றாக வந்து காசோலை ஒன்றை கொடுத்தார்கள். அந்த காசோலையில் தேதி, தொகை மற்றும் கையொப்பம் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. வேறு எதுவும்

பூர்த்தி செய்யபடவில்லை எனறால் எனது பெயரும் பூர்த்தி செய்து இருந்தது. இக்கிடாஸ் வங்கிக்கணக்கில் லோன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை வங்கிக்கணக்கு வைத்துள்ளேன். நான் ஆம்பூரில் இக்கிடாஸ் வங்கியில் கணக்கு வைக்க காரணம் என்னவென்றால் அங்கு அந்த சமயம் எனதுதம்பி அங்கு பணியாற்றி இருந்தார் அவர் பரிந்துரை செய்ததால் நான் வங்கிக்கணக்கை அங்கு ஆரம்பித்தேன்.

என்னிடமும் எனது அக்கா சரண்யாவிடமும்ஒரே தேதியில் பாபும், எதிரியும் கடன் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. முதலில் எனது அக்காவிடம் பெற்றுக்கொண்டு அதன் பின்பு என்னிடம் பெற்றுக்கொண்டார்கள். எனது அக்கா, மாமா மற்றும் பாபு ஆகியோர் சொன்னதின் பேரில் தான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். பாபு என்பவர் எனக்கு நேரிடையாக பழக்கம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் எத்தனை தினங்கள் கழித்துவழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 11.08.2022ம் தேதி காசோலையை வங்கியில் சமர்ப்பித்தேன். 12.08.2022 ம் தேதி பணம் இல்லை என்று காசோலை திருப்பப்பட்டது. 26.08.2022ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பை யார் அனுப்பினார் என்றால் வி.வி.குணசேகரன் என்பவர் அனுப்பினார். வழக்கறிஞர் எனக்கு மாமா ஆவார்.

நான் பணத்தை வட்டிக்காக கொடுத்தேன் என்றால் சரியல்ல. தெரிந்தவர் என்று எனது மாமா சொன்னதால் வட்டிக்காக கொடுக்கவில்லை. எதிரி பாபுவிடம் பணத்தை திருப்பி கொடுத்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பாபுவை கடன் கொடுத்ததை குறித்து திரும்ப கேட்டேனா என்றால் கேட்டேன் அவர் காசேலையை கொடுத்து பணம் பெற்று கொள்ளுமாறு சொன்னார். பாபுவிடம் நான் எந்த தேதியில் பணத்தை திரும்ப கேட்டேன் என்றால் தேதி நினைவில்லை மே மாதம் கேட்டேன். மேற்படி விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி பாபுவிடம் தான் நான் பணத்தை கொடுத்தாகவும் அதனை பாபுவிடம் திரும்பவும் செலுத்திவிட்டதாகவும் எனக்கு பணம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

எதிரி பாபுவிடம் பணத்தை திருப்பி கொடுத்ததால எதிரியின் காசோலையை திருப்பி தராமல் பாபு என்பவர் தான்மேசடி செய்து என்னுடைய பெயரில் வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் அது சரியல்ல. எனவே எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை, எதிரி பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) பாபு

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,

Judicial Magistrate, Vaniyambadi.